1979 மார்ச் 22]

திரு. என். வரதராஜன் : அவருடைய அறையிலே இருக்கும் படியான ஒரு ஒதுக்கமான பகுதியிலே தான் அந்தப் பணம் கிடைத்தது என்று சொல்லுகிறார்கள். அந்த டி.எம்.ஓ.வும் ஒரு புற நோயாளியின் சீட்டைக் கையில் பிடித்திருந்ததாகவும் அதிலே தான் பவுடரைக் தடவியிருக்கிறார்கள் என்று சொல்கிறார். ஆகவே அந்தச் சீட்டையும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். அந்தச் சீட்டு விசாரணை முக்கியமானது என்ற அடிப்படையிலே அந்தச் சீட்டையும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ள அரசு ஆணையிடுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அத்தகைய விவரங்களை விசாரிப்பதற்காகத் தான் அந்த அதிகாரி நியமிக்கப்பட்டிருக்கிறார். அந்த விசாரணையில் உண்மை கிடைக்கும்.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, அந்த டாக்டர் பேரிலே சார்ஜ் ஷீட்போட்டு கிரிமினல் கேஸ் போடுவதாகத் தெரிகிறது. அதே நேரத்திலே இந்த விசாரணை நடைபெறுகிறது. இப்படி இந்த விசாரணை நடைபெறுகிறபோது அந்த கேஸும் போடப் பட்டு நடத்தப்படுமா ? பிராஸிக்யூஷன் நடக்குமா ? அந்த புரசீடிங்ஸ் என்ன ஆகும் என்பதை அறிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : விசாரணை பற்றிய தகவல் மட்டும் தான் என்னிடத்திலே இருக்கிறது. சார்ஜ் ஷீட் போட்டிருக்கிறார்களா என்ற தகவல் இல்லை. விசாரிக்கப்படு கிறபோது அந்த உண்மையின் அடிப்படையிலே தான் அரசு எந்தக் காரியத்தையும் செய்யும்.

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, * * (மணியடிக்கப்பட்டது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி எண். 504.

பழநி பேருந்து நிலையம்.

*வினா எண். 504—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பழநி நகர பேருந்து நிலையம் போதிய வசதியில்லாமல் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுவது அரசுக்குத் தெரியுமா ?

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(ஆ) ஆம் எனில் பழனி பஸ் நிலையத்தை விரிவுபடுத்துவது குறித்து பழனி நகராட்சியில் பரிந்துரையின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) இந்தப் பேருந்து நிலையத்தில் போதிய வசதியில்லை என்பது உண்மை. ஆனால் விபத்துக்கள் ஏதும் நடந்ததாக அரசுக்குத் தகவல் இல்லை.

(ஆ) நகராட்சியின் கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. என். பழனிவேல் : தலைவரவர்களே, பழநி நகர பேருந்து நிலையத்தில் கடந்த இரண்டாண்டுகளுக்கு முன்பு 15 வயதுப் பையன் விபத்திற்குள்ளானான். அதாவது பஸ்கள் கூட்டமாக நிற்பதால் இடையிலே சிக்கி ஒரு பையன் இரண்டு வருஷங்களுக்கு முன்பு மரணம் அடைந்திருக்கிறான். மேலும் பங்குனி உற்சவம், மாதாந்திர கார்த்திகை போன்ற பெருந்திரு விழாக்கள் பழநியில் தொடர்ந்து நடப்பதால் பஸ்கள் ஆயிரக் கணக்கில் வருகின்றன. பழநி நகரத்தில் அவைகள் நிற்பதற்கு வசதியற்ற சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இதை அரசு அவசர உணர்வோடு கவனத்தில் எடுத்துக்கொண்டு நிறைவேற்றித் தருமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, அத் தகைய விபத்துக்களைப்பற்றித் தகவல் இல்லை என்றுதான் குறிப் பிட்டேன். பேருந்து நிலையம் வசதியில்லாமல் இருக்கிறது. அதை விரிவுபடுத்தும் வகையில்தான் முயற்சி மேற்கொள்ளப் பட்டிருக்கிறது. பக்கத்தில் இருக்கின்ற ஒரு குளத்தை இதற்காகச் சேர்த்துக்கொள்கின்ற வகையில் முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. அந்த முயற்சி முடிந்தவுடன் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்தும் பணி மேற்கொள்ளப்படும்.

திரு. என். பழனிவேல் : தலைவரவர்களே, இந்த ஆண்டு அதை நிறைவேற்றித் தர நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, இந்த ஆண்டு என்று குறிப்பிடுவதற்கு வழியில்லை. தலைமைப் பொறி யாளரிடமிருந்து, இந்தக் குளத்தைப் பேருந்து நிலையத்திற்குப் பயன்படுத்தும் வகையில் சில நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருக் கின்றன. அந்த நிபந்தனைகளின் அடிப்படையில் ஆணையரிடத் தில் தகவல் கோரப்பட்டிருக்கிறது. தகவல் வந்தவுடன் எவ்வளவு விரைவில் முயற்சி மேற்கொள்ள முடியுமோ அவ்வளவு விரைவில் முயற்சி மேற்கொள்ளப்படும்.